திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, அதிகப்படியான மின்சார உற்பத்திக்காக சில திட்டங்களை உருவாக்குவதற்காக பெயர்களை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். முக்கியமாக காடாம்பாறை திட்டம் என்ற ஒரு திட்டத்தை உருவாக்குவதற்காக மத்திய சர்க்காரிடம் அனுமதி பெற்று, பின்னால் அனுமதி மறுக்கப்பட்டு, பின்னால் மீண்டும் அனுமதிக்கப்பட்டு வேலை துவக்கப்படக்கூடிய நிலையில் இருப்பதாகத் தெரிகிறது. அதைப்பற்றி இப்போது ஒன்றுமே சொல்லவில்லை. இந்தத் திட்டம் இருக்கிறதா இல்லையா? இருக்கிறது என்றால் எப்போது ஆரம்பிக்கப்படவிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9.20.]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இது அனல் மின் திட்டத்தைப் பற்றிய கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது அனல் மின் திட்டம்; அதாவது நீர் மின் திட்டம் பற்றியது. காடாம்பாறைத் திட்டத்தைப் பொறுத்த வரையில், அதை நிறைவேற்றுவதா அல்லது வேண்டாமா என்று நீண்டகாலமாகக் காலதாமதம் செய்து வந்தார்கள். இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர், அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான உத்தரவு பிறப்பிக்கப் பட்டு, இப்போது அந்தத் திட்டம் துவக்கப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வெங்கிடு.

திரு. கே. சுப்பு: என்னைக் கூப்பிடாமல், ஒரே கட்சியில் இரண்டு பேர்களைக் கூப்பிடுகிறீர்களே?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படி உட்கார்ந்துகொண்டு பேசினால், எப்போதுமே கூப்பிடப் போவதில்லை.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: தலைவர் அவர்களே, தொழில் நிறுவனங்கள் நிறைய இருக்கின்ற பகுதி களுக்கு அனல் மின்சார நிலையங்கள் துவக்க இருப்பதாக அரசு உத்தேசித்தி இருக்கின்றது என்று அமைச்சரவர்கள் தெரிவித் ரார்கள். இந்த அடிப்படையிலே தமிழ் நாட்டில் மிகப் பெரிய தொழில் நிறுவனங்கள் இருக்கக்கூடிய கோவையிலேயே அனல் மின்சார நிலையம் ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கோவையைப் பொறுத்த வரையில் அதைச் சுற்றி நீர் மின் சாரம் நிரம்ப இருக்கின்ற காரணத்தினால், தற்போது தேவை யில்லை என்று கருதப்படுகிறது. வேண்டுமானால், எதிர்காலத்திலே தொழில்கள் அதிகரித்தால், நிச்சயமாக அது குறித்துச் சிந்திக்கலாம்.

1978 செப்டம்பர் 8]

திரு. க. சுப்பு. பேரவைத் தலைவர் அவர்களே, சமய நல்லூர் அனல் மின்சாரத் திட்டத்தைப் பற்றி. அதை ஏற்றுக் கொள்ளுவதற்கு இல்லை என்று அமைச்சர் அவர்கள் இப்போது சொன்னார்கள். இப்போது இருக்கின்ற அமைச்சர் அவர்கள், அப்போதிருந்த அமைச்சரவையில் இருந்திருக்கிறார்கள். அந்தக் கட்சியிலேயும் இருந்திருக்கிறார்கள். அப்போது அதைத் தவறு என்று ஏன் எதிர்க்கவில்லை? இப்போது என்ன நடவடிக்கைகள் அதைத் தொடர்ந்து எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அப்போது இப்பிரச்னை அமைச்சர் அவைக்கு வரவில்லை.

ஆலய ஊழியர்களுக்குக் குடும்ப நல நிதித் திட்டம்.

வினா எண் 84—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அரசு ஊழியர் குடும்ப நலத் திட்டத்தின் கீழ் கோவில் அர்ச்சகர்கள் ஊழியர்கள் பயனடைய அரசிடம் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இல்லை; ஆனால், ஆலய ஊழியர்களுக்குப் பொருந்தும் வகையில் குடும்ப நல நிதித் திட்டம் ஒன்றை, உயிர் ஒப்பந்த நிதிக் குழுவத்தின் (எல்.ஐ.சி.) உதவியுடன் உருவாக்குவதற்கான இந்து சமய அறநிலையத்துறை ஆணையாளரின் செயற் குறிப்புகள் அரசின் ஆய்வில் உள்ளன.

திரு. மா. மணிமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, 1976 ஜனவரி வரை கோவில் ஊழியர்களுக்குக் குடும்ப நலத் திட்டம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னர் இந்தத் திட்டம் நிறுத்தப்பட்டிருக்கிறது. அப்படி நிறுத்தப்பட்டதற்கான காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன். மேற்கொண்டு அந்தத் திட்டத்தைத் துவக்கி, தொய்வு இல்லாமல் 1976-லிருந்து ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுத்து செயல் படுத்த இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, எப்போதுமே அந்தத் திட்டம் முறையாக அமுல்படுத்தப்பட வில்லை. 1975-ம் ஆண்டிலே அப்படி ஒரு திட்டம் கொண்டு வருவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு அந்தத் திட்டத்திலே ஈடுபடும்படி, ஊழியர்களைக் கேட்டுக்கொண்டபோது எல்லோரும் அதிலே ஈடுபடவில்லை. மேலும் வயதானவர்கள் ஒரு சிலர் அந்தத் திட்டத்திலே தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்

கிறார்கள். சரியான பலனளிக்காத திட்டம் என்ற காரணத்தினாலே, பிறகு அதற்கான ஆய்வு ஒன்று நடத்தப்பட்டு, ஆணையாளர் குறிப்பைப் பெற்று, புதிய திட்டம் உருவாகிக் கொண்டிருக்கிறது.

திரு. க. மருதாசலம்: தலைவர் அவர்களே, தமிழகத்திலே பல்வேறு ஆலயங்களிலே பணியாற்றிக் கொண்டிருக்கின்ற ஊழியர்கள் இன்னும் தினக்கூலி வாங்கிக் கொண்டிருப்பது அரசுக்குத் தெரியுமா? அவர்களை எதிர்காலத்தில் அரசு ஊழியர்களாக ஆக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இது ஓய்வு பெறும் ஊழியர்களைப் பற்றிய கேள்வி. தனிக் கேள்வி போட்டால், அதற்கான விவரங்கள் சேகரிக்கப்பட்டு, அரசின் கருத்தைத் தெரிவிக்க இயலும்.

திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற இந்து அறநிலைய கோடிலே செக்ஷன் 12-லே கோவில் ஊழியர்களை அரசு ஊழியர்களாக ஏற்றுக் கொள்வதாகச் சட்டம் சொல்லுகிறது. இதை அமுலுக்கு இந்த அரசாங்கம் கொண்டு வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: அரசு அலுவலர்களாக ஆக்கினால் அதற்கான விதிகளின்படி மிகப் பெரிய நிதிப் பொறுப்பு அரசுக்கு ஏற்படும். இப்போதுள்ள நிதி நிலைமையில், அறநிலையங்கள் தாங்க முடியாமல், சம்பளம் கொடுக்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கின்றன. இதற்கான வழிவகைகளைக் கண்டு பிடித்த பிறகுதான், இந்தக் கருத்து பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள முடியும்.

கடன் நிவாரணச் சட்டத்திலிருந்து விலக்கு

*வினா எண். 85—திரு. மு. செல்வராஜ்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

கோயில்களுக்குச் சேர வேண்டிய குத்தகை பாக்கியை வசூலிக்க சிவில் கோர்ட் மூலம் நடவடிக்கை எடுக்க தற்பொழுது உள்ள கடன் நிவாரணச் சட்டத்திலிருந்து விதி விலக்கு அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: 1978-ம் ஆண்டு கடன் நிவாரண அவசரச் சட்டத்தில் குத்தகை அல்லது வாடகையானது 'கடன்' என்பதன் பொருள் விளக்கத்திலிருந்து தெளிவான முறையில் விலக்கப்பட்டிருக்கிறது. எனவே, கோவில்கள், தமது குத்தகை பாக்கியை வசூலிப்பதற்காக வழக்குகள் தாக்கல் செய்வதற்கு, கடன் நிவாரணச் சட்டத்தினால் தடை ஏதுவுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி எண் 86..